**33. அநுமான் கதை (2)**

அநுமான் இராமபிரானுக்குத் தூதனாக அமைந்து நின்று அரிய உதவிகள் பலவற்றைச் செய்தான். அநுமான் செய்தஉதவிகள் பல. இராமபிரான் அயோத்தியை அடைந்து முடி சூடிய உடன் எல்லோருக் கும் பரிசுகள்



வழங்கினார். அநுமானுக்கு எத்தகைய பரிசும் வழங்கவில்லை. இது சீதாபிராட்டிக்கு மனவருத்தத்தை உண்டு செய்தது. "நமக்குப் பல உதவிகள் செய்த அநுமானுக்கு யாதும் பரிசு வழங்கவில்லையே" என்று சொன்னாள். அதற்குஇராமபிரான் "அநுமான் நம்மிடம் எத்தகைய பரிசையும் எதிர் பார்த்து நமக்கு உதவி செய்ய வில்லை. அவன்செய்துள்ள உதவிக்கு நம்மால் கைம்மாறு செய்ய முடியுமோ? கைம்மாற்றினை எதிர்பாராமல் செய்த உதவியின்நன்மையை ஆராய்ந்து பார்த்தால் கடலினும் பெரிது என்று என்று கூறினார். பெரியோர்கள்கூறியிருக்கின்றார்கள்! ஆயினும் சீதாபிராட்டிக்கு மனநிறைவு உண்டாக வில்லை.உடனே முத்துமாலை ஒன்றைஅனுமானுக்கு இராமபிரான் வழங்கினார். அதனை அநுமான் எடுத்து வாயில் வைத்துப் பற்களால் முத்தைக்கடித்து உடைத்தான் அப்பொழுதுதான் இராமபிரான் கூறிய கூற்றின் உண்பை சீதாபிராட்டிக்கு விளங்கியது. திகைம்மாறு நோக்கா உதவி?

(இராமாயணம்)